**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
***(29.03.2017முதல் 02.04.2017)***

***அறிக்கைஎண் :025/2017*** **தேதி:28.03.2017**

***மாநிலத்தின் கடந்தவாரவானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

***எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (29. 03. 2017 முதல் 02. 04. 2017)***

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலை காணப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 69 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 18 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 29.03.17 | 0 | 37 | 23 | 2 | 69 | 38 | 9 | தெற்கு |
| 30.03.17 | 0 | 37 | 23 | 2 | 69 | 38 | 10 | தெற்கு |
| 31.03.17 | 0 | 37 | 23 | 3 | 69 | 38 | 9 | தெற்கு |
| 01.04.17 | 0 | 37 | 23 | 3 | 69 | 38 | 10 | தெற்கு |
| 02.04.17 | 0 | 38 | 24 | 3 | 69 | 38 | 9 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ மாலைநேர காற்றின் ஈரப்பதம் குறைந்தும், பகல் மற்றும் இரவுநேர வெப்பநிலை உயர்ந்தும் மேலும் மணிக்கு 10 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் உள்ளூர் பகுதிகளில் சூரைக்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டுகொடுக்கவும்.
- ✓ கோடை மழையை அறுவடை செய்யவும், பயிர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களை சரிவிற்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாகவும் மற்றும் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் தென்னை உட்பட இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள அனைத்து பயிர்களுக்கும் மண்ணின் ஈரப்பதத்தை பொருத்து நீர் பாசனம் செய்யவும்.
- ✓ கறவை மற்றும் எருமை மாடுகளுக்கு தெளிப்பான் மூலம் உடல் முழுவதும் நீர் தெளிப்பதால் அதிக வெப்பத்தாக்கத்திலுருந்து பாதுகாக்கலாம். மேலும் போதுமான அளவு குடிநீர் வழங்கவும்.
- ✓ சூடான மற்றும் வறண்ட வானிலையின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த கோழிக் குடில்களை ஈர கோணிப்பைகளை கொண்டு மூடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ காற்றின் ஈரப்பதம் குறைந்தும், வெப்பநிலை உயர்ந்தும், மணிக்கு 10 கிலோமீட்டர் வேகத்தில் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் சூரைக்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

***பேராசிரியர் மற்றும் தலைவர்***
***வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்***